Regietered as a News paper in Cevlon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
N. tional Tamil Daily
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன் 389

மலர் 14
இதழ் 57

யாழ்ப்பாணம் பங்குனி 25 ஸபர் 22 வெள்ளிக்கிழமை (7-4-72)

கல்வனேஸ்ட்
தண்ணீர் தாங்கிகள்
(G. I. Water tanks)
400 கலன்களிலும் மற்றும் தேவையான அளவுகளிலும் கிடைக்கும்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

8 APR 1972
LIBRARY

குற்ற விசாரணைக்கமிஷன் மசோதா

# 8 ஆண்டுகளுக்கு மட்டுமே முதலில் செல்லுபடியாகும்

## பீலிக்ஸின் திருத்தத்துடன் சட்டம் நிறைவேறியது

கொழும்பு, வியாழன்

குற்றவிசாரணைக்கமிஷன் மசோதா முதல்கட்டத்தில் எட்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகக் கூடியதாகவிருக்கும். நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவால் தாக்கல் செய்யப்பட்ட சட்டமூலத்தில் செய்யப்பட்டுள்ள மிகப்பிரதான திருத்தம் இதுவாகும்.

முதலில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ள புதிய ஷரத்து ஒன்றின்படி இந்தச் சட்டம் எட்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். பின்னர் தேவைப்படுமாயின் இம்மசோதா சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சாதாரண பெரும்பான்மை வாக்கு பலத்தின் மூலம் ஒரு சமயத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகக் கூடியதாகத் திருத்தியமைத்துக் கொள்ளவும் வழிசெய்யப்பட்டுள்ளது. இதுபற்றி மக்கள் பிரதிநிதிகள் சபையில் திரு பீலிக்ஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் இந்த அரசுக்குப்பிறகு ஒரு அரசாங்கம் பதவிக்கு வருமானால் சிறிது காலத்துக்கேனும் இதனால் பயன்பெறவேண்டுமென்ற நினைவோடேயே இச்சட்டம் முதல் கட்டத்தில் எட்டு ஆண்டுகளுக்குமாத்திரமே செல்லுபடியாகக் கூடியதாக ஆக்குவதென்று தாம் முடிவு செய்ததாகக் கூறினார்.

இம்மசோதா ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கொண்டுவரப்படவில்லையென்றும் சட்டப்படி பதவிக்கு வரும் எல்லா அரசுகளுமே பாதுகாப்பு பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இது கொண்டுவரப்படுதாகவும் திரு. பண்டாரநாயக்கா அளித்துள்ள வாக்குறுதியை உறுதிப்படுத்துவதாக அமைந்த மேற்படி நடவடிக்கை இருந்ததாகக் கருதப்படுகின்றது. (ச)

## மசோதாவுக்கு ஆதரவாக 85 வாக்குகள்

குற்றவிசாரணைக் கமிஷன் மசோதாவின் இரண்டாம் வாசிப்பு இன்று அதிகாலையில் 85 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. 109 பேர் ஆதரித்தும் 24 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். இருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அமைச்சின் துணை அமைச்சர் திரு. பி. வை. துடாவ மசோதாவை ஆதரித்து வாக்களித்தார். கம்புறுப்பிட்டிய எம். பி. திரு. ஒலிவன் நாணயக்கார, ரத்தம எம். பி. திரு. எம். ஜி. மெண்டிஸ் ஆகிய இருவரும் வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை.

### கம்.யூ கட்சி எம் பிக்கள்

வாக்களிப்பில் கம்யூனிஸ்ட் கட்சி எம். பி.க்களுக்கிடையிலும் முரண்பாடு காணப்பட்டது.

கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, கோலன்னவ எம். பி. திரு. சரத்முத்தெட்டுகம ஆகியவர்கள் எதிர்த்து வாக்களித்தனர். கட்சி

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பீட்டர் கெனமன் வெளிநாடு சென்றிருப்பதால் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

முன்னாள் தமிழரசுக்கட்சி எம்பியான யாழ்ப்பாணம் எம். பி. திரு சி. எக்ஸ். மார்டின் மசோதாவை ஆதரித்து வாக்களித்தார்.

## டாக்டர் விக்கிரமசிங்கா கோஷ்டி வெளியேறும்?

கொழும்பு, வியா

குற்றவிசாரணைக் கமிஷன் மசோதா மீதான வாக்களிப்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது. டாக்டர் விக்கிரமசிங்காவின் தலைமையிலான கோஷ்டியினர் கட்டு முன்னணியிலிருந்து வெளியேறுவது பற்றி பேசத் தொடங்கியுள்ளனர்.

டாக்டர் விக்கிரமசிங்காவின் தலைமையிலான கோஷ்டி வெளியேறும் பட்

[5-ம் பக்கம் பார்க்க]

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 389-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
12 Q 0716 ரூபா 90,360

இரண்டாவது பரிசு
01 V 0686 ரூபா 36,144

மூன்றாவது பரிசு
24 L 0848 ரூபா 9036

ரூபா 451-80 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0186 | 16 A 0946 |
| 18 A 0678 | 18 A 0895 |
| 20 A 0550 | 26 A 0768 |
| 36 A 0348 | 03 C 0536 |
| 04 C 0808 | 18 C 0622 |
| 27 C 0708 | 02 D 0505 |
| 11 D 0489 | 30 D 0640 |

(5ம் பக்கம் பார்க்க)

ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## புதிய தேர்தல்கள் மே முதல் ஆரம்பம்

குருநகர், வியா

கூட்டுறவுத் துறையின் புனருத்தாரண நடவடிக்கையில் அரசாங்கத்தால் திருப்பப்பட்டுள்ள ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய தேர்தல்கள் மே மாத முதல் ஆரம்பமாக இருக்கின்றன.

இதற்கான அறிவித்தல்கள் வடபகுதியிலுள்ள சங்கங்களுக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர்களால் அனுப்பப்பட்டு வருகின்றன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக சேர்வதற்கான காலக்கெடு சென்ற மாதம் 31-ம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

தற்பொழுது ஆரம்பச்சங்கங்களின் இயக்குநர்சபையில் அங்கம் வகிப்பவர்களும் இப்புதிய தேர்தல்மூலம் மீண்டும் இயக்குநர்சபைக்கு தெரிவு செய்யப்பட்டால் அவர்களது இயக்குநர் சபையின் உறுப்புரிமை தொடர்ந்திருக்கும் என்றும் தெரியவருகிறது.

இத் தேர்தல்களை நடத்துவதற்கு அவ்வப்பகுதி சங்கங்களின் உத்தியோகத்தர்களும் தேர்தல் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தில்

## கீரிமலை பனம் பொருள் ஆராய்ச்சி நிலைய பனங்கட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட தரமான பனங்கட்டி கீரிமலையில் உள்ள நிலையத்திலும் யாழ்ப்பாண ஐக்கியவியாபாரச்சங்கத்திலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் இப்பகுதி காலத்திற்கான தயாரிப்புக்களைத் தற்போது ஆரம்பித்துள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரதும் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திக்கழகத்தினதும் ஆதரவோடு இக்கைத்தொழில் அபிவிருத்திச்சபையினரும் மேற்படி நிலையம் கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

## திருட்டுநகைவிற்பனை; முறியடிக்க ஒத்துழைப்பர்

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ்ப்பாணத்தில் திருட்டு நகைகளை விற்பவர்களை கைதுசெய்வதில் நகைக்கடைச் சொந்தக்காரர் பொலிசாருடன் பூரணமாக ஒத்துழைப்பதென நகைக்கடை முதலாளிமார் சங்கத் தூதுக் கோஷ்டி பொலிஸ் உயர் அதிகாரியிடம் உறுதி கூறியுள்ளனர்.

வடபகுதி உதவிப் பொலிஸ் சுப்பிரின்டனிடம் ஒரு மகஜரை கையளித்த இந்த தூதுகோஷ்டி நகைக்கடைக்காரர் திருடருக்கு உடந்தையாயிருக்கிறார் கள் என்ற வதந்தியை மறுத்துரைத்தது.

இந்தத் தூதுகோஷ்டியில் பிரபல நகைவியாபாரிகளான திருவாளர்கள் ஆ. நல்லதம்பி, பொ. அம்பலவாணர், கே. ரி. எம். கிருபன உரிமையாளர்

(5-ம் பக்கம் பார்க்க)

# தென்வியட்னும் நிலைக்குமா-இல்லையா?

## இப்போதைய போராட்டம் தெளிவுபடுத்துமாம்

சைகோன், ஏப். 6

**தென் வியட்னும் நிலைத்திருக்கப் போகின்றதா இல்லையா என்பதை இப்போது வடவியட்னுமியர் கொடுத்துள்ள பயங்கர தாக்குதல் நடவடிக்கைகள் தீர்மானிப்பதாய் இருக்கும் என்று தென் வியட்னும் அதிபர் திரு. வான்தியு கருத்து வெளியிட்டிருக்கிறார்.**

தென் வியட்னுமின் வட பகுதியிலுள்ள இரு மாகாணங்களைக் கைப்பற்றுவதற்காக இப்பொழுது வட வியட்னுமியர் மூர்க்கமான முறையில் போரிட்டுவருகிருர்கள்.

இந்த இருமாகாணங்களும் வடவியட்னுமியரிடம் வீழ்ச்சியடையாமல் தம்மாலான எல்லா முயற்சிகளையும் எடுக்கும்படி தமது படைகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக திரு. வான்தியு தென்வியட்னும் மக்களுக்கு அறிவித்துள்ளார். இப்பொழுது மூன்று முனைகளில் கடுமையான போர் நடைபெற்று வருகிறது. குவான்திரி நகரின் மீது கடும்தாக்குதல் ஒன்றினை வடவியட்னுமியர் நடத்தி வருகிருர்கள்.

இந்த நகருக்கும் ஹியு என்ற நகருக்குமிடையில் வாழ்பவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்கத் தரைப்படைகள் அப்பகுதிகளுக்கு விமானம் மூலம் கொண்டுபோய் இறக்கப்படுகின்றனர். சைகோனுக்கு சுமார் 60 மைலிலுள்ள இன்னொரு நகரைக் கைப்பற்றவும் வடவியட்னுமியர் கடும்போரிட்டு வருவதாகத் தெரிகின்றது.

கம்யூனிஸ்ட் நிலைகள் மீது தாக்குதல் நடத்திவரும் அமெரிக்க விமானங்களை வடவியட்னுமிய பீரங்கிப் படையினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். தென்வியட்னும் பிரதேசத்திலேயே புதிதாக அமைத்துக் கொண்டுள்ள நிலைகளிலிருந்து வடவியட்னுமியர் இத் தாக்குதல்களை நடத்தி வருகிருர்கள். இங்கு குண்டு வீசுவதற்குச் செல்லும் அமெரிக்க சண்டை விமானங்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாக நேர்வதாகக் கூறுகின்றனர். விமான எதிர்ப்புப் பீரங்கிகளை மாத்திரமின்றி நிலத்திலிருந்து ஆகாயத்தை நோக்கிச் சுடப்படும் ஏவுகணைகளையும் கடற்படைகள் எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இப்பகுதியில் சுமார் 40,000 பேரைக் கொண்ட கம்யூனிஸ் பீரங்கி மற்றும் டாங்கிப் படைகள் நிலைகொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

கடந்த எட்டுநாட்களில் வடவியட்னுமியர் மேற்கொண்டுள்ள தாக்குதல் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு அமெரிக்க தென் வியட்னுமிய விமானப்படையினர் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில் அதிபர் நிக்ஸனை அமெரிக்கப் பிரமுகர்கள் பலர் வியட்னுமில் குண்டுவீச்சை நிறுத்தும்படி வற்புறுத்தத் தொடங்கியுள்ளனர். குண்டுவீச்சை நிறுத்தி விட்டு மீண்டும் பாரிஸ் அமைதிப் பேச்சுக்களுக்குத் திரும்பும்படி அதிபர் நிக்ஸனை செனட்டர் எட்வார்ட் கென்னடியும் வலியுறுத்தியிருக்கிறார்.

இப்பொழுது எழுந்துள்ள நிலைமைகாரணமாக வட வியட்னும் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித் தாக்கக்கூடுமா என்று கேட்டபோது எல்லாவித நடவடிக்கைகளுக்கும் நாங்கள் தயாராகவே இருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ‘எதிர்காலத்தில் வேலைதேடி அலையவேண்டியதில்லை’’

சங்கானை, வியாழன்

‘‘வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இவ்வேளையில் படித்த வாலிபர்களுக்கு வேலை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் ஒரளவில் நிவர்த்தி செய்து கொண்டேவருகின்றது. அல்லாமலும் எதிர்காலத்தில் படிப்பு முடித்து பாடசாலைகளில் இருந்து வெளிவேறும் மாணவர்கள் வேலை தேடி அலைந்து திரியாவண்ணம் தற்போது அத்தியாவசிய சீர்திருத்தக் கல்வியை அரசு தோற்றுவித்து அதற்கான பாடத்திட்டங்களை பிள்ளைகளுக்குப் போதித்துவருகிறது.’’

இவ்வாறு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி. வைரமுத்து சண்டிலிப்பாய் தொட்டிலடி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கலாச்சார விளையாட்டு அபிவிருத்திபற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பட்டினசபை ஆரும் வட்டார மக்கள் குழுவினரும் தொட்டிலடி சனசமூக நிலையத்தினரும் ஆதரவில் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆரும் வட்டார மக்கள் குழுத் தலைவர் திரு. க. சதாவந்தன் தலைமைதாங்கினார்.

திரு. வைரமுத்து தொடர்ந்து பேசுகையில் அரசு வகுத்துள்ள புதிய தொழிற் கல்வித் திட்டத்தால் எதிர்காலச் சிறுர்கள் நல்ல பலன் பெறுவதற்கு இடமுண்டு. இத்திட்டத்திற்கு நாம் ஒத்துழைப்பு நல்கவேண்டும். பெருவாரியான பணத்தைக் கல்விக்கென செலவு செய்யும் இச்சந்தர்ப்பத்தில் நாமும் நல்ல முறையில் அதனைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எடுத்ததற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கக்கூடாது.

பாலர் பாடசாலை, வாசிகசாலை, விளையாட்டுப்பகுதி போன்றவை நல்ல நிலையில் அமைத்துத் தொடங்கி எல்லோருடைய ஒத்துழைப்புடனும் நடாத்தவேண்டும். பட்டின சபையும் ஆன உதவிகளைச் செய்ய முன்வரும் என்றார்.

திருவாளர்கள்: சி. இலட்பிரகாசம், சி. துரைராசா, மு. நடராசா, வி. குணராசா, எஸ். நிக்கலஸ்பிள்ளை ஆகியோர் பேசினர்.

## ‘சோவியத்யூனியன் பெருமைப்படுகிறது’

இந்திய உறவு பற்றி

மாஸ்கோ ஏப் 6

இந்தியாவுடன் ஏற்பட்டுள்ள உறவுகள் குறித்து சோவியத் யூனியன் திருப்தியடைவதுடன் பெருமையும் அடைகின்றது என்று சோவியத் வெளி உறவு அமைச்சர் திரு குரோமிக்கோ கூறியிருக்கிறார்.

இந்திய வெளிஉறவு அமைச்சர் திரு சுவரன்சிங்குடன் ஆலோசனைகள் நடத்தியதின் பின்னர் இக்கருத்தை திரு குரோமிக்கோ வெளியிட்டார்.

பாகிஸ்தானுடன் பாரதம் நேரடித் தொடர்புகளைமேற் கொள்வதற்கான முதல்முயற்சிகளை எடுத்திருப்பது குறித்தும் சோவியத் வெளி உறவு அமைச்சர் வரவேற்புத் தெரிவித்தார்.

சோவியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திய பின்னர் இந்திய அமைச்சர் திரு சுவரன்சிங் தாயகம் புறப்பட்டிருக்கிருர்.

பாகிஸ்தானுடன் இந்தியா எந்தமுறையில் தொடர்பு கொள்ள விரும்புகின்றது என்பது பற்றி நிருபர்கள் கேட்டபோது உச்சநிலையில் சந்திப்புகள் ஏற்படுவதையே இந்தியா விரும்புகின்றது. ஆனால் அதற்கு முன்பு விசேஷத் தூதர்கள் நிலையில் பேச்சுக்கள் ஆரம்பமாகவேண்டும் என்றே இந்தியா விரும்புகின்றது என்றும் சுவரன்சிங் கூறினார்.

தமது மாஸ்கோ பயணம் பயனுள்ளதாக முடிந்ததாகவும் திரு சுவரன்சிங் தெரிவித்தார். இருநாடுகளுக்குமிடையிலான பொருளாதார கலாசார உறவுகள் யாவும் மிகச்சிறப்பாகவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். திரு குரோமிக்கோவை மீளவிரைவிலேயே இந்தியாவுக்கு விஜயம்செய்யும்படி தாம் கேட்டதாகவும் அதனை அவர் ஏற்றுக் கொண்டதாகவும் இந்திய அமைச்சர் தெரிவித்தார்.

—

### சிறுபான்மைத் தமிழர் முன்னணிக் கூட்டம்

கன்னுகம் வியா.

‘‘ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பொதுமக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகின்றது. மரவரி முறையால் பல இன்னல்களை அனுபவித்து வந்த சீவல் தொழிலாளர் இன்று தவறணை முறையால் பல நன்மைகளை அடையவிருக்கின்றனர்.’’

இவ்வாறு உடுவிலில் நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் முன்னேற்ற முன்னணிக் கூட்டத்தில் திரு ஜே ஆர் அல்பேட் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. வி. இ இராசதுரை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. வி. அல்பேட் பேசுகையில் தவறணை முறையால் சீவல்தொழிலாளர் உத்தியோக வாய்ப்புகளைப் பெறுவதால் அவர்களின் பொருளாதாரம்முன்னேற்றமடையுமென்றும் ஒவ்வொரு சீவல் தொழிலாளருக்கும்தவறணைமுறையை நன்கு விளக்கி அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டுமென்றும் கூறினார். மேலும் கள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களிடமிருந்து அவர்கள் கடன் வசதிகளையும் பெற வாய்ப்பளிக்கப்படவேண்டுமெனவும் கூறினார்.

### தொடம்பே முதலாளிகொலை ஆராயக் கமிஷன்

கோட்டை, வியாழன்

1966 சதியில் சம்பந்தப்பட்டுள்ளதாக கைதுசெய்யப்பட்டிருந்த தொடம்பே முதலாளி தற்கொலைசெய்து கொண்டதைத் தொடர்ந்து அவரது மரணம் சம்பந்தமாக ஆராய்வதற்கு கமிஷன் ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை, பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் ராஜாங்க நீதிஅமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர். டயஸ், பண்டாரநாயக்கா கொழும்பு மத்தியபகுதி ஆகிசபை உறுப்பினர் திரு. ஆர். பிரேமதாசாவின் கேள்விஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார். இக்கமிஷனின் தலைவராக திரு. ஈ. எவ். டி. சில்வா கடமையாற்றுவாரெனவும் அவர் கூறினார்.

### 3 1/2 கோடி ரூபா விக்கிரகங்கள் களவு

சென்னை, ஏப். 6

தமிழ்நாட்டு ஆலயங்களிலிருந்து 3 1/2 கோடி ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் களவுபோயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்களவு சம்பந்தமாக இதுவரை 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இக்களவில் ஈடுபட்டதாக நம்பப்படுகிறது.

### உங்கள் பலன்

பங்குனி மாதம் 25-ந்திகதி (7-4-1972)

மேஷம்- அறவழிகளை மனம்நாடும், பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செலவுக்கு இடமுண்டு.

ரிஷபம்- வழக்கு விவகாரங்களின் மூலம் பணம் செலவாகும், எதிர்பாராத விடயத்தில் தடை ஏற்படலாம்.

மிதுனம்- முக்கியமான சந்திப்பு ஒன்று கிடைக்கும், மதிகவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் சற்றதால் பயனும் உண்டு.

கடகம்- எண்ணியகாரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

சிம்மம்- இரக்க சிந்தை மேலிடும் பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கண்ணியமான தினம்.

கன்னி- தொழில்துறையில் புதிய வெற்றிகிடைக்கும், மேலதிகாரியின் பாராட்டுக்கு இலக்காவீர்கள்.

துலாம்- செய்தொழிலால் சிறப்பு ஏற்படும், சகதொழிலாளர்களின் ஆதரவு கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவிரும்புவீர்கள்.

விருச்சிகம்- சிறிதளவு கோபம் உங்களை நிலை தடுமாறவைக்கும், வேண்டியவர்களையே பகைத்துக் கொள்ள நேரிடலாம்.

தனுசு- வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும்.

மகரம்- இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு.

கும்பம்- பக்கத்திலேயே படுகுழி தோண்டுவதற்கு எதிரிகள் முனைவர், பண விவகாரத்தில் மோசடி நடக்கலாம்.

மீனம்- புதிய வழிகள் மூலம் பொருள்வரவுக்கு இடமுண்டு, சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமை கமழும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### 40 பேர்பலி

டாக்கா, ஏப்ரல் 6

சில தினங்களுக்கு முன் டாக்காவுக்கும் நாராயணகஞ்சிக்குமிடையில் ஏற்பட்ட சுழற்காற்றின் காரணமாக சுமார் 40 பேர் மரணமாகியிருப்பதாக இப்பொழுது கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

### நேயுற்ற கைதிகள்

புதுடில்லி, ஏப். 6

போரின் படுமோசமுற்றும் மோசமாக நேயுற்றும் இருக்கும் சுமார் 30பேர் கொண்ட பாகிஸ்தான் போர்க்கைதிகளை இந்தியா பாகிஸ்தானுக்கு விரைவில் அனுப்பி வைக்கவிருக்கின்றது.

### கவர்னர்கள் நியமனம் பின்போடப்பட்டது

பாகிஸ்தானில்

கராச்சி, ஏப். 6

பாகிஸ்தான் வட எல்லை மாகாணத்திலும் பலுகிஸ்தானிலும் கவர்னர்களை நியமிக்கும் தனது முடிவை பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ பின் போட்டுள்ளார்.

தேசிய அவாமிக் கட்சி, ஜமாய் இஸ்லாமிக் ஆகிய கட்சிகளின் அறிக்கைகளை அடுத்தே இந்த முடிவைத் தாம் எடுத்திருப்பதாக பூட்டோ தெரிவித்தார்.

—

### சிறுவர் பாடசாலை

முல்லைத்தீவு, புதன்

மறுதவணை ஆரம்பத்தில் முல்லைத்தீவில் ஒரு சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்படுமென அறியப்படுகிறது. இதற்கான முயற்சிகளை முல்லைத்தீவு இந்து தமிழ்க்கலவன் பாடசாலைப் பெற்றுர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு க. பொன்னுச்சாமி மேற்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட

# இரண்டாம்தர தலைமை ஆசிரியர்கள்

... நமது நிருபர் இ. பாலசிங்கம் ...

குருநகர், வியாழன் வடமாகாணக் கல்விப் பகுதி அரசினர் பாடசாலை களில் உதவி ஆசிரியர்களாக இருந்து இரண்டாந்தரத் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு நியமனம் பெற்ற ஆசிரியர்களும், அவர்கள் நியமனம் பெற்றுள்ள பாடசாலைகளும் பின் வருமாறு:

(நேற்றைய தொடர்ச்சி)

சாவகச்சேரிப் பகுதி

திரு ஏ பரமசாமி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். திருமதி பி சிவலிங்கம் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம், திரு என் எஸ் நாகரத்தினம் கைதடி கலைவாணி வித்தியாலயம், திரு கே கோவிந்தபிள்ளை கல்வயல் சிவப்பிரகாச வித்தியாலயம், திரு ஏ எம் சின்னத்தம்பி சரசாலை அ த க பாடசாலை, திருமதி எம் சிவஞானம் கொடிகாமம் சரஸ்வதி வித்தியாலயம், திரு சி ராஜகோபால் அல்லாரை வெள்ளப்போக்கடி அ த க பாடசாலை, திரு எஸ் இராசசேகரம் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், திரு கே. சந்தையா மட்டுவில் சந்திரபுர வித்தியாலயம், திரு எஸ் இராசரத்தினம் போக்கடி றோ க த க பாடசாலை, திரு எஸ் சின்னத்தம்பி கைதடி சி சி த க பாடசாலை, திரு எஸ் கந்தசாமி வரணி வடக்கு அ த க பாடசாலை, திரு எம் இராசரத்தினம் வரணி மகா வித்தியாலயம், திரு கே வேலுப்பிள்ளை குடமியன் அ த க பாடசாலை, திரு எஸ் வீரப்பிள்ளை மட்டுவில் வடக்கு அ த க பாடசாலை, திரு எஸ் சரவணமுத்து மிருசுவில் கலைவாணி வித்தியாசாலை. திரு பி தம்பு மந்துவில் அ த க பாடசாலை, திரு கபிரியல் சாவகச்சேரி றோ க பாடசாலை, திரு வி நாகராசா போக்கடி அ த க பாடசாலை, திரு எம் இரத்தினசிங்கம் கோவிலக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், திரு எம் மாரிமுத்து இடைக்காடு அ த க பாடசாலை, திரு எஸ் மகேசன் கைதடி குருசாமி வித்தியாலயம்

கிளிநொச்சிப் பகுதி

திரு எம் சுப்பையா முரசு மோட்டை றோ த க பாடசாலை, திருமதி ஏ பேரின்பநாதன் குமுளமுனை அ த க பாடசாலை, திரு எஸ் சந்திரசேகரம் ஆலன்குளம் த க பாடசாலை, திரு ரி அடுவானந்தம் போக்கறுப்பு அ த க பாடசாலை, திரு வி ஜயரத்தினம் கண்டாவளை அ த க பாடசாலை, திரு என் கந்தையா வட்டக்கச்சி தெற்கு அ த க பாடசாலை, திரு ரி செல்லத்துரை கிளிநொச்சி குளம் அ த க பாடசாலை, திரு எஸ் சுப்பிரமணியம் ஆனையிறவு அ மி பாடசாலை, திரு கே அந்தோனிமுத்து பளை றோ க த க பாடசாலை, திரு கே சிதம்பரப்பிள்ளை சூரன் பற்று கணேச வித்தியாலயம், திரு எம் சண்முகவடிவேலு பனன்கண்டி அ த க பாடசாலை. திரு ஐ தம்பிப்பிள்ளை அல்லிப்பளை சி சி த க பாடசாலை. திரு எஸ் கிருஷ்ணபிள்ளை ஒட்டறுத்த குளம் அ த க பாடசாலை, திரு எஸ் பொன்னையா வளைபுரம் த க பாடசாலை, திரு எஸ் இராசையா மடுவில் நாடு மகேஸ்வரி வித்தியாலயம், திரு எஸ் கந்தையா வேம்படிக்கேணி சி சி த க பாடசாலை, திரு எஸ் நகுலாயம் தம்பிராய் த க பாடசாலை, திரு வி சபாரத்தினம் செல்வாதீவு த க பாடசாலை, திரு எச் அந்தோனிப்பிள்ளை கபியாலை நாகபடுவன் பாடசாலை, திரு பி நடராத்தினம் செகிடியா குறிச்சி தமிழ் கலவன் பாடசாலை. திரு பி கனகரத்தினம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரி பாடசாலை, திரு எம் கந்தப்பு தருமபுரம் அ த க பாடசாலை. திரு ஏ சபாரத்தினம் உமையாள்புரம் அ த க பாடசாலை, திரு எஸ் கந்தப்பு முரசுமோட்டை த க பாடசாலை. திரு கே கந்தையா பூநகரி நல்லூர் த க பாடசாலை. திரு எஸ் பொன்னுத்துரை சாமிபுலம் அ த க பாடசாலை

(மிகுதி நாளை வெளிவரும்)

## நாட்டுக்கூத்து அரங்கேற்றம்

மன்னார், வியாழன்

காவலூர் புனித-மரியாள் பெண் பாடசாலை மாணவிகளால் புனித அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் 'வீரரும் வீரமங்கையும்' என்ற சரித்திர நாடகக் கூத்து அரங்கேற்றப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

7—4—72 வெள்ளி

(செய்திகள், காலை 6-30 பகல் 12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை 6-15 நாதசஞ்சலி - மங்கள வாத்தியம், 6-20 சைவநற்சிந்தனை சோ. சண்முகசுந்தரம் 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-40 அறிவிப்புகள், 6-50 உரைச்சித்திரம் கா. ஜெகன்மோகன் எழுதியது 7-00 மண் நூர் இன்தமிழ் வஸந்தி நகுலேசர், 7-30 மாகாணச்செய்திகள், 7-35 குரல்வளை, 8-00 பயனுள் நூர் ஆன், 8-15 இஸ்லாமியகீதம்.

மாலை 6-10 அறிவிப்புகள் 6-15 சுகவாழ்வு சுகாதாரத் திணைக்களப் பிரிவினர் அளிக்கும் நிகழ்ச்சி 6-30 பஜனை ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்திலிருந்து - பூசையும் திவ்வியஜீவன சங்கத்தினரின் பஜனையும் அஞ்சல், 7-00 இளைஞர் மன்றம் நடத்துபவர்; வாசெனி அன்னு 7-30 உலகச்செய்திகள் 7-35 முத்திநெறி பிரதி ஆக்கம் கே. பி. ஹரன் 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-10 செய்தியின் பின்னணியில், 9-15 அறிவிப்புகள், 9-30 பேச்சு, 9-40 பாட்டு எம். இலகநாயகம் போல்.

# 'ஒற்றுமையிலேயே தமிழர் விமோசனம் தங்கியுள்ளது'

யாழ்ப்பாணம், வெள்ளி

"எந்த ஒரு ஆட்சியின் அரசியல் அமைப்பும் பொருளாதார வளர்ச்சியில்தான் தங்கியுள்ளது. பிறநாடுகளை நம்பியிருந்தால் எந்த ஒரு நாடும் பொருளாதாரத்தில் வளமில்லாத அன்னிய நாடுகளுக்கு அடிமையாகவே இருக்க நேரிடும். நட்டமில்லாத நாடு செயல் இழந்த நாடாகவே இருக்கும். எமது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டம் செயலாலதின் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பெருக்கி பொருளாதார சுபீட்சத்தை இந்நாட்டில் உருவாக்க உதவும். இது இனங்களி ஒருமித்த ஒற்றுமையின் அடித்தளத்தில்தான் தமிழ் பேசும் மக்களின் விமோசனமே தங்கியுள்ளது."

இவ்வாறு வண்ணார்பண்ணையில் நடைபெற்ற தேசிய முற்போக்கு மன்றத்தின் ஆரம்பக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு கே. ஐ. நாகராஜன் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு. எம். எச். எம். யூசுப் தலைமை வகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் அமரர் பிலிப் குணவர்த்தனவின் மறைவுக்கு அஞ்சலி செய்யப்பட்டது.

இம்மன்றம் சோஷலிசத்தைப் பரப்புவதற்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்கும் முற்போக்குச் சக்திகளின் கருத்தரங்குகளுக்கு களம் அமைத்து கொடுப்பதோடு தோட்டக் கைத்தொழில் சட்ட விவகார அமைச்சர் திரு. கொல்வின் ஆர் டி. சில்வாவை அழைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மன்றத்தின் புதிய உத்தியோகஸ்தர் தெரிவின் போது தலைவராக திரு. கே. ஐ நாகராஜனும், உபதலைவராக எம். எச் எம். யூசுப்பும், செயலாளராக அருமைநாயகமும் பொருளாளராக திரு. த. இரத்தினசிங்கமும் பிரச்சாரச் செயலாளராக திரு எஸ். எம். இஸ்மயிலும் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"


இரும்பு - பித்தளை - மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு. கொழும்பு-12
தொலைபேசி: 33143-4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530



காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எல்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவைப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P044

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

